அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

பிப்ரவரி - 2026 | மரம் - 5 | கன்று - 2 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-

ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து,
அறிவு உன் ஆத்துமாவுக்கு
இன்பமாயிருக்கும்போது, நல்யோசனை
உன்னைக் காப்பாற்றும்,
புத்தி உன்னைப் பாதுகாக்கும்.

நீதிமொழிகள் 2:10-11



ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

எனக்குப் பிரியமான குட்டிச் செல்வங்களே!

# உங்களுடன் 1 நிமிடம்

கர்த்தருக்குப் பிரியமான குட்டிப்பிள்ளைகளே, வாலிப தங்கை, தம்பிகளே, உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். தேவ கிருபையும், அவரது மாறாத இரக்கமும், தயவும், காருண்யமும் உங்களை அனுதினமும் நிரப்பும்படி உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

## அசட்டைப்பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்

''அசட்டைக்காரரே, பாருங்கள். பிரமித்து அழிந்து போவீர்கள். உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன். ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்க மாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றார்'' (அப். 13:41).

அசட்டை என்பது ஆபத்தானது. அழிவானது. தேவனுடைய ஆசீர்வாதங்களை அடியோடு இழக்கச் செய்யவுள்ளது. ஆகவே, சிறு பிள்ளைகளே! யாரையும் அசட்டைப்பண்ணாதீர்கள். யாரையும் அசட்டைப் பண்ண ஜாக்கிரத்தையாயிருங்கள், எச்சரிக்கையாயிருங்கள்.

வேதவசனத்தின்படி, அநேகர் இந்த வார்த்தைகளை அசட்டை பண்ணினபடியால் தேவனுடைய ஆசீர்வாதங்களை இழந்து போனார்கள். அவர்கள் யார் யார்?

1. சவுல் : தேவன் அவரை அழைத்து இஸ்ரவேலருக்கு முதல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். தாவீதை கொலை செய்ய வகைத் தேடி, சாமுவேல் தீர்க்கதரிசியின் வார்த்தையை அசட்டைப் பண்ணி அஞ்சனம் பார்க்கிற பெண்ணிடம் சென்று தேவனை அசட்டைப்பண்ணினான். கடைசியில், பரிசுத்த ஆவியை இழந்து, பொல்லாத ஆவி அவனுக்குள் புகுந்து வேதனையுடன் மரித்துப்போனான்.

2. தாவீது : யுத்த நேரத்தில் யுத்தத்திற்குப் போவதை அசட்டைப் பண்ணி, உப்பரிகையில் உலாவி அதன் மூலம் கர்த்தரை அசட்டை செய்து பயங்கரமான பாவத்தில் விழுந்துப்போனான்.

3. ஏசா : ஒரு நேர உணவுக்காக தன்னுடைய தகப்பனுடைய சேஷ்ட புத்திர பாகத்தை அசட்டைப் பண்ணி தேவனுடைய ஆசீர்வாதங்களை இழந்துப்போனான்.

4. யூதாஸ் : கர்த்தருடைய எச்சரிப்பை, சீஷத்துவத்தை அசட்டைப் பண்ணினான். தேவனை கன ஈனப்படுத்ததினால் பரிதாபமாக மரித்துப்போனான்.

5. சிம்சோன் : தனக்குக் கர்த்தர் கொடுத்த மேன்மையின் இரகசியத்தை அசட்டை பண்ணினான். வேசியின் மடியில் படுத்து தன்னுடைய பராக்கிரமத்தின் வல்லமையை அசட்டைப் பண்ணினான்.

எனதருமைக் குட்டி குழந்தைகளே! இந்த அசட்டை ஆபத்தானது. கர்த்தர் உங்களுக்குத் தந்திருக்கிற தாலந்துகளை, வல்லமைகளை அசட்டை செய்தால் நீங்கள் கன ஈனப்படுவீர்கள். ஆக எல்லாரையும் கனப்படுத்த முந்திக்கொள்ளுங்கள். யாரையும் பகைத்துக்கொள்ளாதீர்கள். நீங்கள் மற்றவர்களை கனம் பண்ணும்போது, கர்த்தர் உங்களை கனப்படுத்துவார். ஆமென்!

அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**



# கடுக்காய்

## (MYROBALAN, YELLOW MYROBALAN, CHEBULIC MYROBALAN)



''கடுக்காயுந் தாயுங் கருதி லொன்றென் றாலும்
கடுக்காய்த் தாய்க் கதிகங் காண் நீ''

என அகத்தியர் முனிவரால் போற்றப்பட்டுள்ள கடுக்காய், மருத்துவரின் காதலி எனவும், உயிர்க் கொடுக்கும் மருந்தெனவும் வடமொழியில் பாராட்டுப் பெற்றுள்ளது. சீரணித்தல் சம்பந்தமான பல்வேறு உபாதைகளைத் தீர்த்திடும் திறனுடையது கடுக்காய். இதிலுள்ள ''டானின்'' சத்தை எடுத்து தோல் பதனிடும் தொழிலில் உபயோகப்படுத்துவார்கள். பல நவீன ஆலைகளில் அரிமனம் ஏற்படாமல் காத்திடும் அட்டைக் காகிதம் செய்யவும் இந்த கடுக்காய் பயன்படும். அநேக வேலை வாய்ப்பைக் பெருக்கி, அந்நிய செலாவணியையும் ஈட்டித்தரும் சக்தியுடையது இந்த கடுக்காய் மரம்.

விஞ்ஞானப் பெயர் : ''டெர்மினாலியா செபுலா'' (TERMINALIA CHEBULA)

தாவரக் குடும்பம் : ''காம்பிரெட்டேசி'' கிளை நுனியில் பூக்கள் உருவாகும் நிலையைச் சுட்டிக் காட்டும் பெயரே, ''டெர்மினாலியா'' என்பதாகும்.

### பொது விவரம் :

மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, ஒரிசா, ஆந்திரா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் கடுக்காய் மரம் அதிக அளவில் காணப்படுகிறது. அதிலும் பஸ்தர் பகுதியில் மிக அதிக அளவில் இருப்பதால், மத்திய பிரதேசத்தில் மட்டும் நாட்டின் மொத்த மரங்களின் எண்ணிக்கையில் 75% அளவில் உள்ளன. தமிழ்நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய காடுகளில் அதிகமாக உள்ளன. எனினும் சேலம் மாவட்டத்தில் உற்பத்தியாகும் கடுக்காயே மிகவும் உயர்ந்த தரமுடையவைகளாகும். பெரியார் ஈரோடு மாவட்டத்தில் தாளவாடிப் பகுதியில் அதிக அளவில் கடுக்காய் சேகரிக்கப்படுகிறது. ஈரச் சூழ்நிலைகள் அதிகமாக உள்ள பகுதிகளில் கடுக்காய் மரங்கள் வளருவதில்லை. 800-1400 மீட்டர்



உயரமுடைய குன்றுப்பகுதிகளில், இலையுதிர்க் காடுகளில் இது வளருகிறது. இது ஓங்கி உயர்ந்து வளரக்கூடிய மரம். வட இந்தியப் பகுதிகளிலும் கடுக்காய் மரம் வளரக்கூடியது. ஆனால், இதனுடைய உயரம் தென்னிந்திய மரங்களைவிடக் குறைவானது. தமிழகத்தில் 20-25 மீட்டர் உயரம் வளருகிறது.

இந்தக் கடுக்காய் இலையுதிர்க்கும் மரமாகும். குளிர்க்காலத்தில் இலையுதிர்த்து பிப்ரவரி, மார்ச் மாதங்களில் துளிர் இலைகளை உருவாக்கும். இத்துளிர் இலைகள் பட்டுப்போன்ற தன்மையுடையவை. இலைகள் 75-150 செ.மீ நீளமும் 3.75-7.5 செமீ அகலமும் உடையவை. சிறு காம்புடன் நீண்ட மட்டை வடிவத்துடன் இருக்கும். தோலைப் போன்றிருக்கும். துளிர்கள் உருவாகிக்கொண்டிருக்கும் சமயம், மார்ச்-ஏப்ரல் மாதங்களில் பூங்கதிர்கள் உருவாகும். கிளைகளின் நுனிப்பகுதிகளில் இலைச் சந்துகளில் உருவாகும். இப்பூங்கதிர்கள் 5.0-7.0 செ.மீ. நீளமுடையவை. பூக்கள் சிறியவை. பச்சை நிறம் கலந்த வெண்மை நிறமுடையவை. சிறிது நறுமணமும் கொண்டிருக்கும். இதன்பின் பச்சை நிறக் காய்கள் உருவாகி, அக்டோபர் மாதத்தில், கரும்பழுப்பு நிறத்துடன், நீண்ட பள்ளங்களுடைய தடித்த ஓடுகளுடன் முதிரும் 4.0 து 2.5 செ.மீ. அளவுடைய முட்டை வடிவச் சாயலில் கடினமான ஓடுடைய கொட்டை ஒன்றிருக்கும் இந்தக் கடுக்காயில் பல வகைகள் உள்ளன. கடுக்காய் விளையும் பகுதியைப் பொறுத்து, விசயன், அரோகிணி, பிருதிவி, அமிர்தம் சேதகி, சிலந்தி, திருவிருத்தி, அபயன்னெ மருத்துவத்தில் பாகுபாடு செய்துள்ளனர். நிறம், வடிவம் ஆகியவற்றைப் பொறுத்து கருங்கடுக்காய், செங்கடுக்காய், வரிக்கடுக்காய், பால்கடுக்காய் எனவும் பிரித்துள்ளனர். ‘‘டானின்’’ தரத்திற்கு ஏற்ப, ‘‘பிம்லீஸ்’’, ‘‘ஜபல் போர்ஸ்’’, ‘‘ராஜ் போர்ஸ்’’, ‘‘லிங் கோர்லாஸ்’’ ‘‘மெட்ராஸ் கோஸ்ட்’’ எனவும் தரப்பாகுபாடு செய்கிறார்கள்.

## கடுக்காயின் பயன்கள்

**தழை** :- இவைகள் கால்நடைகளுக்குத் தீவனமாக உபயோகிக்கப்படுகிறது. இலையில் ‘‘பைரோகலால்’’ வகை டானின் சத்து உள்ளது.

**பிசின்** :- கடுக்காய் மரத்திலிருந்து உற்பத்தியாகும் பிசினை சேகரித்து, பிற பிசின்களுடன் கலந்து விற்கின்றனர்.

**பட்டை** :- பட்டையில் டானின் உள்ளது. பட்டைப் பொடியுடன் ‘‘பாரா பார்மால்டி ஹைட்’’ அல்லது ‘‘பர்பியூரால்’’ கலந்து, நல்லதொரு ‘‘மோல்டிங் மாவு’’ தயாரிக்கலாம்.

**பூக்கள்** :- பூக்களில் நிறைய தேன் திரவம் உள்ளது. சில பகுதிகளில் கடுக்காய் மரமே பிரதான தேன் உற்பத்தி மரமாகவும் உள்ளது.

**கடுக்காய்** :- பல்வேறு தொழில்களுக்கு ஒரு உபமூலப் பொருளாக விளங்கும் டானின் சத்து, கடுக்காய்த் தோட்டிலிருந்து பெறப்படுகிறது. இக்காயின் மொத்த எடையில், தொட்டுப் பகுதி 30-32% அளவில் இருக்கும் மரத்திலிருந்து உதிர்ந்த காய்களை சுத்தமான தரையில் 10-20 நாட்கள் உலர்த்துகின்றனர். இவ்விதம் உலரும் காய்கள் நீளவாட்டத்தில் பள்ளங்களுடன் சுருங்கிவிடும். அதில் அதிக ஒப்படர்த்தியுடைய காய்களே மருத்துவத்திற்கு ஏற்றவை. இவை நீரிலே அமிழும்.

**எண்ணெய்** :- கடுக்காய் கொட்டையிலுள்ள பருப்பில் 36.4% அளவில் ஒரு மஞ்சள் நிற எண்ணெய் உள்ளது. இந்த எண்ணெயில் லினோலியிக், ஒலியிக், பால்டிக், ஸ்டியரிக், அராசிடிக் மற்றும் பெஹகுனிக் என்ற கொழுப்பு அமிலங்கள் உள்ளன.

**மரம்** :- கடுக்காய் மரத்தின் மென் பகுதி, சிறிது பச்சை அல்லது மஞ்சள் அல்லது கருமை கலந்து சாம்பல் நிறமாக இருக்கும். ஒரு கன மீட்டர் மரத்தின் எடை 945 கிலோவாகும். நீடித்து உழைக்கக்கூடியது. நன்கு பாலிஷ் ஏற்கும். மழைக்காலத்திலோ அல்லது மழை முடிந்ததுமோ, மரத்தை வெட்டி, காற்றிலே உலர விட வேண்டும். உலர்ந்துவிட்டால், மரத்தை அறுப்பது கூட சிரமமாக இருக்கும். தென்னிந்தியாவில், கடுக்காய் மரத்தைத் தூண்களாகவும் உத்திரங்களாகவும் உபயோகிக்கின்றனர். மாட்டு வண்டியின் பலப் பகுதிகளைச் செய்யவும் பயன்படும். வீடுகளுக்கான சட்டங்களும் தயாரிக்கலாம். கடுக்காய் மரத்தை இதர கடின மர வகைகளுடன் சேர்த்து காகிதக் குழம்பும் தயாரிக்கலாம். இதனைக் கொண்டு பொதிந்து கட்டும் அட்டை மற்றும் எழுதும் காகிதம் ஆகியவற்றை செய்திடலாம். இதன் மரம் நல்ல விறகாகக் கூட பயன்படும்.

**மருத்துவப் பயன்கள்** :- வடமொழியில் இந்தக் கடுக்காய்க்கு ''ப்ராணதா'' என்ற பெயர் உண்டு. அதற்கு ''உயிரூட்டும் மருந்து'' அல்லது ''மருத்துவரின் காதலி'' என்ற அர்த்தமும் உண்டு. ''பிஷக் பிரியா'' என்ற பெயரும் கடுக்காய்க்கு உள்ளது. இந்த கடுக்காய்க்கு பல நோய்களைத் தீர்க்கும் தன்மை உண்டு. மிகுந்த நீர் வெளியேறுதல், சுவையறியாமை, இடிபட்ட புண், உதட்டு நோய், கண் நோய்கள், கைகால் எரிச்சல், கோழை வெளிப்படுதல், தலை சுற்றல், தொண்டைக் கம்மல், நீர் வேட்கை, ஈரல் நோய், பெரு வயிறு, பங்குவாதம், மார்ப்பு நோய், மூல ரோகம் மேக ரோகம், மேதோரோகம், வாய் நீர் சுரத்தல், வாந்தி, விக்கல், வெண்குட்டம், அஜீரணம், உஷ்ண வாயு, குடல் புரட்டல், வயிற்றுக்கட்டி, வாய்ப்புண் ஆகிய நோய்கள் நீக்கும் சக்தி கடுக்காய்க்கு உள்ளது.

**கடுக்காயின் இதரப் பயன்கள்** :- கடுக்காயைக்கொண்டு பலவித மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. கடுக்காய்ச் சத்து, கடுக்காய் நெய், கடுக்காய் லேகியம், கடுக்காய் வடகம், கடுக்காய் கற்பம், வீடுகளிலே கடுக்காய் கஷாயம், கடுக்காய் துவையல், கடுக்காய்ப் பொடி எனப் பல முறைகளில் மருந்துகளாகத் தயாரிக்கப்படுகின்றன். தாயால் குழந்தைகளுக்கு உணவூட்ட முடியும். ஆனால், கடுக்காயோ உணவை ஜீரணிக்கச் செய்து வளர்ச்சியூட்டும்.

**கடுக்காயைக் கொள்ளக் கூடாதவர்கள்** :-

செரிப்பித்தன்மையற்றவர்கள் வறட்சியான உணவு உட்கொண்டவர்கள், நஞ்சு, பசி, பட்டினி கிடந்தோர், பிள்ளைத்தாய்ச்சிகள், குருதிவாங்கப்பெற்றவர்கள், ஜூரமுடையவர்கள், தொண்டை இறுகலுள்ளவர்கள் ஆகியோர் கடுக்காயைக் கொள்ளலாகாது.

**பயிர் முறை** :-

நன்கு உயர்ந்து வளரும் மரமாக இருப்பதால், சாலை ஓரங்களிலும், பெரிய கட்டிடவளாகங்களிலும் வளர்க்கலாம். கண்மாய் கரைகள் மிகவும் உகந்தது. குன்றுகளின் அடிவாரங்களிலும் வளர்க்கலாம். புன்செய் நிலங்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில மரங்களை வளர்த்து, உபரி வருவாய் பெறலாம். முதல் ஆண்டு 30-60 செ.மீ. அளவிலே வளரும். எனினும், மொத்தத்தில் கடுக்காயின் வளர்ச்சி நிதானமாகவே இருக்கும்.

# வேதமே வெளிச்சம்


(மீகா 7:15)
God bless you
கர்த்தர்:
"நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் நடந்ததுபோலவே, உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்."


பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன்; உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்.
(யாத். 34:10)
God bless you


என் ஆத்துமாவைக் காத்தருளும், என் தேவனே, உம்மை நம்பியிருக்கிற உமது அடியேனை நீர் இரட்சியும்.
சங்கீதம் 86:2
God bless you


மாற்கு 5:36
God bless you
இயேசு: "பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு."

# கினியாக் கோழி!

### மயிலும் கினியாவும்

கோழிக் குடும்பத்தில் பெரும்பாலும் மயிலை ஒத்திருப்பது கினியாக் கோழி. இதற்கு மயிலுக்கிருப்பது போல் நீண்ட தோகை இல்லை. அதனைப் போல் ஆடவும் செய்யாது. ஆயினும் தோற்றத்தில் பெண் மயிலை ஒத்திருக்கும். மயிலின் நிறமும் இதற்கு இல்லை. ஆயினும் மயில்களைப்போல் இது மரங்களுக்குப் பறந்துச் சென்று அங்கேயே காலங்கழிக்க விரும்புகின்றது. மயிலுக்கும் பாம்புக்கும் பகை என்பார்கள். கினியாக் கோழி ஒரு பாம்பைப் பார்த்துவிட்டால் லேசில் அதை விட்டு விடாது. தன்னால் அதனைத் கொல்ல முடியாமல் போனால் பெருங்குரலில் ஆரவாரஞ் செய்து சுற்றுப்புறங்களில் உள்ள மனிதரை அந்த இடத்துக்குக் கொண்டு வந்து, அந்த பாம்புக்கு அழிவைத் தேடக்கூடிய இயல்பு கினியாவினிடம் காணப்படுகிறது. இந்த இயல்புக்காகவே கினியாக் கோழிகளைத் தம் வீடுகளில் வளர்க்கிறார்கள். மேலும் பங்களாத் தோட்டங்களுக்கு அழகைத் தரும் பறவைகளில் மயிலைப் போல் இவையும் முக்கியமானவை. வளர்ப்பு முறை மயிலுக்கும் இதற்கும் ஒன்றுதான்.

### இயல்புகள்

கினியாவை, பங்களாவின் காவற்காரப் பறவை என்று சொல்லலாம். ஆங்கிலத்தில் இதனை, ‘‘காவல் காக்கும் நாய்’’ (WATCH DOG) என்பார்கள். மரங்களிலே காலங் கழிப்பதினால், தான் இருக்கும் இடத்துக்கு வரும் மனிதர் முதல் எந்தப் பிராணியையும் இது எளிதில் கண்டுக் கொள்ளுகிறது. ஆளைக் கண்டுவிட்டால் அல்லது ஒரு பிராணியைக் கண்டுவிட்டால், உடனே இது உரக்கக்கூவி அதன் வருகையைப் பற்றி பங்களாவில் உள்ளவர்களை உஷார்ப்படுத்துகிறது.



காடுகளிலே தம் இயல்பில் திரியும் கினியாக்களின் வாழ்க்கை விநோதமானது. பெண் பறவை தரையில் புதர்களின் இடையில் எவர் கண்ணுக்கும் புலப்படாத இடத்தில் தன் கூட்டை அமைத்து அங்கே முட்டையிட்டு அவைகளை அடைகாத்து வரும். ஆண் பறவை அருகிலுள்ள மரத்தின் மேல் இருந்துக்கொண்டு பெண் இனத்துக்கு யாதொரு தீமையும் நேராவண்ணம் காவல் புரிகிறது. கூட்டினிடம் எந்த விலங்கேனும் மனிதனேனும் செல்வதைக் கண்டால் உடனே சேவல் பலமாக கத்திப் பெண் பறவையை ஜாக்கிரத்தை செய்கிறது. அப்பொழுது பெண் பறவை கூட்டிலிருந்து பறந்து மரத்துக்குச் சென்று விடும்.

காட்டிலே உள்ள கினியாக்களைப் பிடித்து வரச் செல்கிறவர்களுக்கு அவை எங்கே கூடு கட்டியிருக்கும் என்பது தெரியாது, புதர்களை அவர்கள் எங்ஙனம் சோதனை செய்வார்கள்? அவைகளின் கூட்டை அறிந்துக் கொள்ள அவர்கள் ஒரு தந்திரத்தைக் கையாளுகிறார்கள். காட்டிற்கு போனதும் அவர்கள் எந்த மரத்தில் கினியா

இருக்கிறது என்று முதலில் தேடிக் கொள்வார்கள். உடனே அந்த மரத்துக்கு அருகில் இப்படியும் அப்படியுமாக நடமாடுவர்கள். கினியாவின் கூடு அங்கே ஓரிடத்தில் இருக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும் அவர்கள் நடமாடும் போது தற்செயலாகச் கூட்டின் அருகில் செல்வார்களேயானால் மரத்திலிருக்கும் ஆண் பறவை பலமாகக் கத்திவிடுகிறது. உடனே புதர்களுக்கிடையிலிருக்கும் கூட்டிலுள்ள பெண் பறவை வெளியே பறக்க வந்துவிடுகிறது. கூட்டைத் தேடி அலைகிறவர்கள் இக்காட்சியைப் பார்த்து விடுகிறார்கள். சில நிமிடங்களில் கூடு இருக்கும் இடம் அவர்களுக்குத் தெரிந்து விடுகிறது. பிறகு அவர்கள் கூட்டிலுள்ள முட்டைகளையும் குஞ்சுகளையும் கொண்டு வந்து வளர்க்கிறார்கள். பிறருக்கு விற்கிறார்கள்.

வீட்டில் வளர்க்கும் கினியாவுக்கு முட்டை இடுவதற்கு மறைவான இடத்தில் ஒரு கூட்டை அமைத்துத் தர வேண்டும். அதில் அது முட்டை இட இட வந்த முட்டைகளை எடுத்து வந்து கோழியைக் கொண்டு அடை காக்கச் செய்து குஞ்சுகளை உண்டு பண்ண வேண்டும். பழக்கப்பட்ட கினியா நாம் ஏற்படுத்தும் இடத்தில் முட்டை இடும். இரவு நேரங்களில் கினியாக்கள். மரங்களின் மேல்தான் காலங்கழிக்கும். கினியாக்களில் பெட்டை கோழிக்கும் சேவலுக்கும் இருப்பனபோல் இவைகளுக்கும் கொண்டை (COMB AND WATTLES) உண்டு. சேவல் கத்துவதற்கும் பெட்டைக் கோழி கொக்கரிப்பதற்கும் வித்தியாசம் உண்டல்லவா? அதைப் போலவே ஆண் கினியாவுக்குப் பெருங்குரலைக் கடவுள் அமைத்திருக்கிறார். உயரத்தில் பறந்துச் செல்லும் இயல்பு கினியாவிடம் இருப்பதினால் பல இடங்களுக்கு இது பறந்து போய் மாலையில்தான் தன் கூட்டித்குத் திரும்பும்.

வகை: நிறம் பற்றி அல்லாமல் வேறு விதத்தில் கினியாக்களின் வகைகளைக் கண்டுக் கொள்ள முடியாது. வெள்ளை நிறமுள்ளவையும், சீட்டித் துணியில் இருப்பது போல் வெள்ளையும் கருமையும் கலந்த நிறமுள்ளவையும் வேறு வேறு இனங்களாகும். இரண்டு இனங்களின் தன்மைகளிலும் வேறுபாடில்லை.

உணவு: கினியாக் கோழிகள் புழு பூச்சிகள், இளந்தளிர்கள், அற்பத் தானியங்கள் முதலிய எவற்றையும் உண்ணக்கூடும். அவைகள் தம் இரையை தாமாகவே தேடிக் கொள்கின்றன. நாம் சிறிதளவு கொடுத்தால் போதும். சோளம், பருப்பு வகைகளின் நொய், காய்கறி, சோறு முதலிய எல்லாவற்றையும் உண்ணும். நாம் சிறு தொட்டிகளில் அவைகளுக்கு குடிநீர் வைக்க வேண்டும்.

அடைகாப்பு: கினியாக் கோழிகள் ஒன்று ஒரு வருடத்தில் உத்தேசமாக 30 முட்டைகளிடும். இவைகளின் முட்டைகள் கோழி இனங்களைச் சார்ந்த எல்லா பறவைகளின் முட்டைகளைப் பார்க்கிலும் சிறியதாக இருக்கும். முட்டை தவிட்டு நிறமாக இருக்கும். அதில் புள்ளிகள் காணப்படும். கினியாப் பறவை 5, 6 முட்டைகளை இட்டதும் அடைகாக்க ஆரம்பித்து விடும் அடைக்காப்பு நாள் 28 ஆகும்.

குஞ்சு வளர்ப்பு: முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவந்ததும் அவைகளைத் தாய்க் கோழியுடன் வேறோர் இடத்துக்குக் கொண்டு போக வேண்டும். குளிர், வெயில், காற்று, ஈரம் இவைகளைக் குஞ்சுகள் பொறுப்பதில்லை. அதனால், அவைகளை வெளியில் திரிய அனுமதிக்கக்கூடாது. 6 வாரத்துக்கு மேல் தாய்க் கோழியின் உதவி குஞ்சுகளுக்கு வேண்டுவதில்லை. குஞ்சுகளுக்குரிய ஆகாரம் வான் கோழியின் குஞ்சுகளுக்கு கொடுப்பது போல ஆடை எடுத்த பாலைக் காய்ச்சி இளஞ்சூடாகத் தரலாம். கோழி முட்டையின் வெள்ளை மற்றும் மஞ்சள் கருக்கள் சிறந்த ஆகாரமாகும். சத்துள்ள அரிசி அல்லது கோதுமை தவிட்டை ஈரமாக்கி அதில் உப்பைக் கலந்து தரலாம்.

# நெருப்பின் மேல் நடப்பவர்கள்!
## (சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ)

(யூதா தேசத்திலிருந்து திறமையுள்ள சில வாலிபரை பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அவர்களால் சிறைபிடிக்கப்பட்டு கொண்டு போகப்பட்டனர். அவர்கள் அந்த நாட்டில் உள்ள போலியான தெய்வங்களுக்குத் தலைவணங்கவும். வழிபடவும் முடியாது எனத் தீர்மானித்தனர். அந்த மூன்று இளைஞர்களும் தேவனாகிய கர்த்தருக்குள் உண்மையாய் நிலைத்திருந்தனர். கர்த்தரும் அவர்களை பற்றியெரியும் நெருப்பிலிருந்து அற்புதமாய்க் காப்பாற்றுகிறார்.)

ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் 60 முழ உயரமும் 6 முழ அகலமுள்ள ஒரு பொற்சிலையைச் செய்து பாபிலோனிருக்கிற தூரா என்னும் சமவெளியிலே நிறுத்தி தன்னுடைய தேசத்திலிருக்கிற ஆளுநர்கள், அதிகாரிகள், தலைவர்கள், நீதிபதிகள், பொக்கிஷக்காரர்கள், நீதிசாஸ்திரிகள், விசாரிப்புக்காரர்கள், நாடுகளிலுள்ள அனைத்து அலுவலர்கள் யாவரையும், தான் நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேரும்படி அழைப்பிதழ் அனுப்பினான்.

ராஜாவின் அழைப்பை ஏற்று அனைவரும் அந்த சிலைப் பிரதிஷ்டை விழாவிற்கு வந்து ராஜா நிறுவிய அந்த சிலைக்கு எதிரே நின்றார்கள். அப்போது, கட்டியக்காரன் உரத்த சத்தமாய் சகல ஜனங்களும், ஜாதிகளும், பாஷைக்காரர்களைப் பார்த்து, எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித இசைக் கருவிகளின் சத்தத்தை நீங்கள் கேட்கும் போது, நீங்கள் தாழவிழுந்து ராஜா நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துக் கொள்ள வேண்டும் என்று அறிவிக்கைச் செய்தான்.

அப்படி எவனாகிலும் தாழவிழுந்து, அதைப் பணிந்துக் கொள்ளாமற் போனால், அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவான் என்றான். ஆதலால்,



சகல ஜனங்களும், இசைக் கருவிகளின் சத்தத்தைக் கேட்டவுடனே, தாழவிழுந்து ராஜா நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துக் கொண்டனர். அச்சமயத்தில் கல்தேயரில் சிலர், ராஜாவிடம் வந்து, ராஜாவே நீர் வாழ்க. உம்முடைய கட்டளையை மீறி பாபிலோன் மாகாணத்தின் காரியங்களை விசாரிக்கும்படி நீர் ஏற்படுத்தின சாத்ராக, மேஷாக், ஆபேத்நேகோ என்னும் யூதரான மனுஷர் நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துக் கொள்ளாமலிருக்கிறார்கள் என்றார்கள்.

அப்பொழுது, நேபுகாத்நேச்சார் மகா கடும் கோபங்கொண்டு, அந்த மூன்று வாலிபர்களையும் அழைத்துக் கொண்டு வரும்படி ஆணையிட்டான். அவர்களை ராஜசமூகத்தில் கொண்டு வந்துவிட்டபோது, ராஜா அவர்களைப் பார்த்து. நீங்கள் ஏன் நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துக் கொள்ளவில்லை? என்று கேட்டான். இப்போது மறுபடியும் இசைக் கருவிகள். வாசிக்கும் போது, நீங்கள் தாழ விழுந்து நான் பண்ணிவைத்த சிலையை பணிந்துக் கொள்ள வேண்டும். அப்படி பணிந்துக் கொள்ளாமலிருப்பீர்கள் என்றால், அந்நேரமே எரிகிற தீச்சூளையின் நடுவிலே தூக்கிப் போடப்படுவீர்கள். உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார்? என்றான்.

அதற்கு அந்த மூன்று வாலிபர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவைப் பார்த்து, ராஜாவே இந்தக் காரியத்தைக்குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். அப்படியே விடுவிக்காமற் போனாலும், நாங்கள். உம்முடய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர்நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துக்கொள்வதுமில்லை என்றார்கள்.

உடனே, ராஜா கடுங்கோபம் கொண்டு, அக்கினிச் சூளையை ஏழு மடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி செய்து, அந்த எரிகிற அக்கினிச் சூளையிலே, அவர்களை தங்கள் சால்வைகளோடும், நிசார்களோடும், பாகைகளோடும் மற்ற வஸ்திரங்களோடும் கட்டப்பட்டு, நடுவிலே போடப்பட்டார்கள். அந்த மூன்று புருஷர்களும் கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே விழுந்தார்கள். அப்பொழுது, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் திகில் கொண்டு, தன் மந்திரிமார்களைப் பார்த்து: மூன்று ஆட்களை அல்லவோ கட்டுண்டவர்களாக தீயிலே போட்டோம். ஆனால், இப்போது அங்கே நான்கு பேர் தீயின் நடுவிலே விடுதலையோடு உலாவிக் கொண்டிருக்கிறதை காண்கிறேனே. அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை. நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனைப் போல இருக்கிறது என்றான்.

பிறகு ராஜா நேபுகாத்நேச்சார் தீச்சூளையின் வாயிலருகில் வந்து, உன்னதமான தேவனின் தாசனாகிய சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ என்பவர்களே, நீங்கள் வெளியே வாருங்கள் என்றான். அப்போது, அந்த மூன்று வாலிபர்களும் தீயின் நடுவிலிருந்து வெளியே வந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடன், அந்த தேசத்தின் ஆளுநர்களும், அதிகாரிகளும், இந்த மூவரின் உடல்களின் மேல் தீ பற்றாமலிருக்கிறதையும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், நெருப்பின் வாசனை அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததையும் கண்டார்கள்.

அப்பொழுது ராஜா நேபுகாத்நேச்சார் பேசத் தொடங்கி : சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு நன்றி. அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தெய்வத்தையும் பணிந்துக் கொள்ளாமல் அவரையே நம்பி, ராஜ கட்டளையைத் தள்ளி விட்டு, தங்கள் சாரீரங்களை ஒப்புக் கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய அடியாரை விடுவித்தார். ஆதலால், அந்த மூன்று

வாலிபர்களின் தேவனுக்கு விரோதமாக பழிசொற்களைச் சொல்லுகிற எந்த மனிதனும், எந்த இனத்தானும், எந்த மொழி பேசுகிறவனும் துண்டித்துப் போடப்படுவான். அவன் வீடு தீக்கிரையாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது. இவ்விதமாய் இரட்சிக்கும் தேவன் வேறொருவருமில்லை என்றான்.

பின்பு, ராஜா நேபுகாத்நேச்சார், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான்.

எனதருமை சிறு பிள்ளைகளே! இந்த மூன்று வாலிபர்களின் சரித்திரத்தின் மூலமாக நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்னவென்றால் தேவன், தம்மை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்களுக்கு ஆதரவாகவும், அவர்களை எதிரிகளினால் வருகின்ற மோசங்களிலிருந்து விலக்கிக் காக்கவும், ஆயத்தமாயிருக்கிறார்.

சிலையை வணங்க மறுத்த அந்த மூன்று வாலிபர்களுக்கு எதிராக ராஜாவின் கோபத்தைத் தூண்டுவதில் பாபிலோன் அதிகாரிகள் வெற்றி பெற்றனர். அவர்களுடைய சதித்திட்டம் வெற்றி பெற்றது. ஆனால், அந்த தீயினால் அவர்கள் அழிய வேண்டுமா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் தேவன் கையிலேயிருந்தது. அங்கே எரிகின்ற அக்கினியின் நடுவில் அவர்கள் எந்தச் சேதமும் அடையாமல் நின்று எதிரிகளை வெட்கம் அடையச் செய்தனர்.

உங்களையும் சிலர் எதிர்ப்பார்கள். சில பிரச்சனைகளில் உங்களை தள்ளிவிட்டிருப்பார்கள். ஆனால், சோர்ந்து போகாதிருங்கள். நீங்கள் உண்மையாகவே தேவனின் வழிகளில் நடப்பீர்களென்றால், தேவன் ஒரு நாளும் உங்களை கைவிடாமல், அவர் உங்களுக்கு ஒரு அடைக்கல பட்டணமாக இருந்து பாதுகாப்பார். ஆக, தேவனுக்கு முன்பாக நீங்கள் ஒரு கோழையைப் போல் விழுந்துவிட்டால், அவர் உங்களை மனிதர்களுக்கு முன்பாக ஒரு யுத்த வீரனைப் போல் நிற்க வைப்பார். ஆமென்!

# தீர்க்கமான வேதம்!




உலகத்தின் புத்தகங்கள் எல்லாம் நடந்தவற்றைச் சொல்லும், நடக்கின்றவற்றைச் சொல்லும். ஆனால், பரிசுத்த வேதாகமம் ஒன்று மாத்திரமே, நடந்தவற்றை மாத்திரமல்ல, நடக்கின்றவற்றை மாத்திரமல்ல, நடக்கப் போகின்றவற்றையும் கூறக்கூடிய தீர்க்கதரிசனங்களை உள்ளடக்கியதாயிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசன சம்பவங்களில் சுமார் 590 குறிப்புகள் இதுவரையில் நிறைவேறிவிட்டதாகவும் இன்னும் 20 சம்பவங்கள் மாத்திரமே நிறைவேற வேண்டுமென்றும் ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுள்ளனர். பரிசுத்த வேதாகமத்தின் 27 சதவிகித வார்த்தைகள் தீர்க்கதரிசன வார்த்தைகளாகவே இருக்கின்றன. உலகத்தின் வேறு எந்த புத்தகத்திற்கும் இல்லாத ஒரு தனித் தன்மை உலகில் நடைபெறப் போகின்றவற்றை கூறுகிற தீர்க்கதரிசனங்களை பரிசுத்த வேதாகமம் பெற்று இருப்பதே சாலச்சிறந்ததாகும்.

“நெருப்பின் மேல் நடப்பவர்கள்” தொடர்புடைய சொற்களைக் கண்டு வட்டமிடுக. (வாசிக்க: தானியேல் 3ம் அதிகாரம்).



சாத்ராக்
மேஷாக்
கல்தேயர்
பாபிலோன்
ஏழு மடங்கு
ஆபேத்நேகோ
அக்கினிச்சூளை
நான்காவது ஆள்

நாகசுரம்
கின்னரம்
எக்காளம்
பொற்சிலை
சுரமண்டலம்
கட்டியக்காரன்
நேபுகாத்நேச்சார்
கீதவாத்தியங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ஆ | பொ | ற் | சி | லை | சா | த் | ரா | க் |
| ட் | பே | க | பா | பி | லோ | ன் | மி | னு | ஆ |
| டி | த் | ல | ம | ப | ச | மு | எ | ஒ | உ |
| ய | நே | கீ | த | வா | த் | தி | ய | ங் | கள் |
| க் | கோ | இ | ல் | ல | ம் | பூ | ணை | எ | ஈ |
| கா | த | கா | க் | கா | கு | ரு | வி | க் | ஔ |
| ர | சு | ர | ம | ண் | ட | ல | ம் | கா | க் |
| ன் | நி | ம | யி | ல் | எ | ட் | டு | ள | கி |
| நா | ன் | கா | வ | து | ஆ | ள் | வ | ம் | ன் |
| க | அ | ஆ | உ | ஊ | ஐ | ஒ | கா | கி | ன |
| சு | நெ | வே | ம | க | ண் | யா | ம் | ர் | ர |
| ர | ரு | கா | வ | யே | மே | ரோ | ம | ர் | ம் |
| ம் | ப் | து | சூ | கோ | ஷா | லூ | க் | கா | நே |
| கீ | பு | அ | ல் | வா | க் | ஏ | சா | யா | பு |
| நா | ம | க் | க | தா | நா | ய | க | ன் | கா |
| ற் | கா | கி | இ | யே | சு | கி | றி | ஸ்து | த் |
| ப | ந | னிச் | ஏ | ழு | ம | ட | ங் | கு | நே |
| து | க | சூ | ந | ரோ | ம | ர் | க | ள் | ச் |
| நா | ர | ை | எ | சே | க் | கி | ய | ல் | சா |
| ன் | ம் | ள | ணி | மா | க | ல் | தே | ய | ர் |

# யோனாவின் குமாரனாகிய சீமோனே! (பேதுரு)

''அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் தீர்க்கவும். அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன்...'' (மத். 10:1,2).

பேதுருக்கு பலப் பெயர்கள் உண்டு. சீமோன், கேபா, மலையாளத்தில் பத்ரோஸ், ஆங்கிலத்தில் பீட்டர், கத்தோலிக்க மொழிப்பெயர்ப்பில் ராயப்பர், தெலுங்கு மொழியில் ராய். பேதுரு என்றால் கற்பாறை என்று அர்த்தம். பேதுருவின் தகப்பனார் பெயர் யோனா. தாய் பெயர் தெரியவில்லை. அவருடைய சகோதரன் பெயர் அந்திரேயா. இவர்கள் கலிலேயாவை அடுத்த பெத்சாயிதா ஊரைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய தொழில் மீன்பிடித் தொழிலாகும்.



ஒரு சமயம் இயேசு கிறிஸ்து கப்பர்நகூமிலே போதித்துக் கொண்டிருந்த போது, பேதுருவை தனது சீஷராக்கிக் கொண்டார். இயேசுவுக்கு 12 சீஷர்கள் உண்டு. அதில் முதலிடம் சீமோன் பேதுருவுக்கு கிடைத்தது. அந்த 12 சீஷர்களையும் இயேசு தம்மோடு கூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்.

ஒரு முறை பேதுருவை, இயேசு சந்தித்தபோது, அவர் தோல்வியுற்றவராக இயேசுவிடம் வந்து, ''நாங்கள், முழு இரவும் முயற்சித்தும் ஒரு மீனையும் பிடிக்க முடியவில்லை'' என்று சொன்னார். அதற்கு இயேசு, ''ஆழத்தில் தள்ளி வலையைப் போடுங்கள்'' என்றார். இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வலையைப் போட்ட போது, வலை கிழியத்தக்கதாக, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக, திரளான மீன்களைப் பிடித்தார்கள்'' (லூக்கா 5:4-7).

இந்த அற்புதத்தைக் கண்ட பேதுரு, நடுநடுங்கி, கிறிஸ்துவின் கால்களிலே விழுந்து, ''ஆண்டவரே, நான் பாவியாகிய மனுஷன், என்னை விட்டு போய்விடும்'' என்றார். இயேசு அவரிடம் ''இது முதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்'' என்று சொன்னபோது, பேதுரு தன் படகுகளையும், வலையையும் விட்டு விட்டு, இயேசுவைப் பின்பற்றினார்.

இந்தப் பேதுரு இயேசுவை மிகவும் நேசிக்கலானார். தனிப்பட்ட முறையிலே கர்த்தருக்காக வைராக்கியம் கொண்டவராக இருந்தார். இயேசு தம்முடைய சீஷர்களிடம் கேள்வி கேட்டபோதெல்லாம், பேதுரு முந்திக்கொண்டு முதலில் பதில் சொன்னார். மற்ற சீஷர்களைப் பார்க்கிலும், இயேசு பேதுருவிடம் மிகவும் அதிகமான பொறுப்புகளை ஒப்படைத்தார். அவருக்கு தனிச்சிறப்பும், தனி இடமுமுண்டு. அவர் எருசலேமிலுள்ள கிறிஸ்தவ சபைக்கு மிக முக்கியமானவராகத் திகழ்ந்தார். அப். பவுலும் கூட, இந்தப் பேதுருவை ''சபையின் தூண்களில் ஒருவர்'' என்று அழைத்தார்.

இயேசு கிறிஸ்துவே மேசியா என்கிற வெளிப்பாடு பேதுருவுக்கு இருந்தது. இயேசு தமது சீஷர்களிடம் ''நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்'' என்று கேட்டார்.

அதற்கு சீமோன் பேதுரு, ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்றான். உடனே, இயேசு பேதுருவை. நோக்கி, ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்'' என்றுச் சொல்லி பாராட்டினார்.

கத்தோலிக்க மார்க்கத்தினர், பேதுருவை தங்களுடைய சபையின் முதல் போப்பாண்டவராக கருதுகிறார்கள். பேதுருவின் மேல்தான் இயேசு தம்முடைய சபையைக் கட்டுகிறார் என்கிற எண்ணமுடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால், இயேசுவோ, பேதுருவின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்றுச் சொல்லாமல், இந்தக் கல்லின் மேல் என்று சொன்னார். அந்தக் கல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறதாயிருக்கிறது. ஏனென்றால் அவரே கன்மலையாகவும் இருக்கிறார். (மத்.16:18).

ஒரு முறை இயேசு கிறிஸ்து கடலின் மேல் நடந்து வந்ததைப் பார்த்த சீஷர்கள் பயத்தினால் அலறினார்கள். ஆனால், பேதுருவோ தைரியமாக, ''ஆண்டவரே, நீரேயானால் நானும் கடலின் மேல் நடந்து வரும்படி உத்தரவு கொடும்'' என்று கேட்டார். இயேசு உத்தரவு கொடுத்தவுடன் பேதுரு படகிலிருந்து இறங்கி, இயேசுவை நோக்கி கடலின் மேல் சற்று

தூரம் நடந்துச் சென்றார். இவ்வாறு இயேசு கிறிஸ்து செய்வதைப்போல தானும் செய்ய வேண்டுமென்று பேதுரு விரும்பினார்.

பன்னிரண்டு சீஷர்களுக்குள்ளே, பேதுரு துணிச்சலாக அதிகமாக இயேசுவினிடத்தில் சந்தேகங்களைக் கேட்டு விளக்கம் பெற்றுக்கொண்டார். அடிக்கடி இயேசுவால் கடிந்துக் கொள்ளப்பட்டவரும் இந்த பேதுருதான். ஒரு முறை, அவர் இயேசுவை தனியே அழைத்துக் கொண்டு போய் ''ஆண்டவரே, சிலுவைப் பாடுகள் உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்கு சம்பவிப்பதில்லை'' என்று அவரைக் கடிந்துக்கொள்ளத் தொடங்கினார். அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து, ''எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய், தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்'' என்றார். பேதுரு அந்தக் கடிந்துக்கொள்ளுதலை ஆசீர்வாதமாய் ஏற்றுக்கொண்டார். மனம் சோர்ந்து போய் விடவில்லை.

பேதுருவுக்கு கர்த்தருடைய கிருபையினால் நல்ல வெளிப்பாடு இருந்தது. கிறிஸ்துவினிடம் ''நித்திய ஜீவ வசனங்கள் உண்டு'' என்பதை தெளிவாய் அறிந்திருந்தார். சீமோன் பேதுரு அவருக்கு பிரதியுத்தரமாக: ''ஆண்டவரே! யாரிடத்தில் போவோம்? நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே'' என்றார்.

மூன்றரை ஆண்டுகள் ஊழியத்தில் இயேசு ஒரு சிலருடைய வீடுகளுக்கே விஜயம் செய்தார். அதில் சீமோனின் வீடும் ஒன்று. அங்கே சீமோனுடைய மாமி கடும் ஜுரமாய் படுத்துக்கிடந்தாள். இயேசு கிறிஸ்து அவளுடைய கரத்தைப் பிடித்து தூக்கிவிட்டார். அப்பொழுது ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று. அவள் இயேசு கிறிஸ்துவுக்கு பணிவிடை செய்தாள். இயேசுவுக்கு பன்னிரண்டு சீஷர்கள் இருந்தாலும், கிறிஸ்துவுக்காக வைராக்கியமாக இருந்து போராடத் துணிந்தவர் இந்த பேதுரு மாத்திரமே. தன்னிடமிருந்த பட்டயத்தால், பிரதான ஆசாரியனின் வேலைக்காரன் மல்குஸ் என்பவனை வலது காதற வெட்டினான்.

ஒரு சமயம், இந்த பேதுரு, ''ஆண்டவரே, உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்'' (யோ. 13:38). ''ஆண்டவரே! காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன்.'' (லூக்கா 22:33) ''உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன்'' (மாற்கு 14:29) ''நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றான்.'' (மத். 26:33) அப்போது, இயேசு அவனை நோக்கி, இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்குப் பேதுரு நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்றான். ஆனால், பேதுரு இயேசுவை மறுதலித்து சபிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சேவல் இரண்டுதரங் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று இயேசு தனக்குச் சொன்ன வார்த்தையை பேதுரு நினைவு கூர்ந்து மிகவும் அழுதார்.

யூதாஸ் காரியோத்தும் தவறு செய்தார். சீமோன் பேதுருவும் தவறு செய்தார். யூதாஸ் தான் செய்த பாவத்தை நினைத்து வருந்தினாரேத் தவிர, மனமாற்றம் அடையவோ, கிறிஸ்துவிடம் மன்னிப்பு கேட்கவோ இல்லை. ஆனால், பேதுரு மனந்நொந்து அழுது, கிறிஸ்துவிடம் மன்னிப்பு பெற்று, இரத்த சாட்சியாக தன் ஜீவனைக் கொடுக்கவும் ஆயத்தமாகிவிட்டார். உயிர்த்தெழுந்த இயேசுவை கண்ணாரக் காணும் பாக்கியம் பேதுருவுக்குக் கிடைத்தது. இயேசு பரலோகத்திற்கு ஏறிச் செல்வதை கண்ணாரக்

கண்டவர்களில் பேதுருவும் ஒருவராவார். யூதாஸ்காரியோத்துக்கு பதிலாக மத்தியாவை அவரிடத்திற்கு தெரிந்தெடுக்க ஆலோசனைக் கொடுத்தவர் இந்த பேதுருதான்.

இயேசு உயிரோடெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, அப்போஸ்தலர் நடபடிகளின் முதல் பாகம் முழுவதும் பேதுருவின் செயல்பாடுகள் மற்றும் ஊழியங்களைப் பற்றியே கூறுகிறது. அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து, வல்லமையாகப் பிரசங்கித்து, திரளான ஜனங்களை ஆத்தும ஆதாயம் செய்தார். பேதுரு எழுதிய இரண்டு நிருபங்கள் வேத புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இரண்டாவது வருகையிலே கிறிஸ்தவர்களுக்கு உண்டான நம்பிக்கையைக்குறித்தும் அவர் எழுதியிருக்கிறார்.

கி.பி. 64ம் ஆண்டில் நீரோ என்ற மன்னன், ரோமாபுரியில் ஆட்சி செய்துக் கொண்டிருந்த போது, பேதுருவைக் கைது செய்து ரோமாபுரிக்கு கொண்டுச் சென்றார்கள். பேதுருவை சிலுவையிலே அறைந்து கொல்லத் தீர்ப்பாயிற்று அப்பொழுது பேதுரு, நான் இயேசுவைப்போல நேராக சிலுவையில் அறையப்பட தகுதியற்றவன். என்னைத் தலைகீழாக சிலுவையில் அறைந்துக்கொல்லுங்கள் என்ற வேண்டுகோள் விடுத்தார். அப்படியே அவரை சிலுவையில் தலைகீழாக அறைந்துக் கொன்றார்கள். தன்னுடைய மரணத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துவார் என்று கிறிஸ்து சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. பேதுருவின் போதனைகளைக்கேட்டு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட விசுவாசிகள், அவருடைய உடலை அடக்கம் செய்தார்கள். கான்ஸ்டன்டைன் என்ற ரோம பேரரசன், பேதுரு அடக்கம் பண்ணப்பட்ட இடத்தில் ஒரு ஆலயத்தைக் கட்டினான். இது இத்தாலி தேசத்தில் ஒரு பகுதியான வாடிகன் நகரில் உள்ளது. அங்கே பேதுருவைப் பற்றிய நினைவு மண்டபமும் மியூசியமும், போப்பாண்டவரின் அரண்மனையும் அமைந்திருக்கின்றன.

உலகம் முழுவதிலுமுள்ள கிறிஸ்தவர்கள் ஜூன் 29ம் தேதியை பேதுருவின் நினைவு நாளாக ஆசரித்து வருகிறார்கள்.

இந்த பேதுருவினிடத்தில் சில கெட்ட சுபாவங்கள் இருந்தது. அவர் இயேசுவிடம் யாராவது உதவிக்காக வந்தால் அவர்களைக் கடிந்துக்கொண்டும் அதட்டவும் செய்வார். ஒரு நல்ல அன்பின் வார்த்தையை பேசினதாக எங்கும் வாசிக்க முடியாது. மல்குஸின் என்ற பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுடைய வலது காதை வெட்டினார். கெத்செமனே தோட்டத்தில் இயேசு ஜெபிக்க சொன்னபோது, இந்த பேதுரு தூங்கி வழிந்தார். ஏரோது ராஜா, இவரை பிடித்து சிறைச்சாலையில் வைத்திருந்தார். அப்போது, சபையார் பேதுருவுக்காக ஊக்கமாக ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், இவரோ சிறைச்சாலையில் கொட்டாவி விட்டுக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்தார். இவர் ஒரு பெரிய வாய்ச் சவுடாலான வீரராகவும் இருந்தார்.

அன்பு சிறு பிள்ளைகளே! இந்தப் பேதுருவைப்போல உங்கள் வாழ்க்கையிலும் சில குறைவுகள், பெலவீனங்கள், தடுமாற்றங்கள் இருக்கலாம். அப்படியிருந்தும் உயிர்த்தெழுந்த இயேசு உங்களை நேசிக்கிறார். உங்களைப் பெலப்படுத்தி, திடப்படுத்துகிறார். நீங்கள் கர்த்தருக்காக எழும்பி அக்கினி ஜூவாலையாக பிரகாசிக்கப்போகிறீர்கள். அல்லேலூயா!



# “யோனாவின் குமாரனாகிய சீமோனே!”

**மத்தேயு 4,10,14,16,18,26 மற்றும் அப்போஸ்தலர் 2,5,6,10,11,12ஆம் அதிகாரங்களை வாசித்துவிட்டு, கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. பேதுருவின் சகோதரன் பெயர் என்ன?
2. 12 சீடர்களில் இயேசு பேதுருவுக்கு எத்தனையாவது இடத்தைக்கொடுத்தார்?
3. ஆடுகளை எதற்குள்ளே அனுப்புவது போல இயேசு சீஷர்களை அனுப்பினார்?
4. பேதுரு ஜலத்தின் மேல் நடந்து வர யாரிடத்தில் கட்டளையிடும் என்றான்?
5. இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்று யார் யாரிடத்தில் சொன்னார்?
6. மறுரூப மலையில் பேதுரு ஆண்டவரிடம் எத்தனை கூடாரங்கள் போடுவோம் என்றான்?
7. பேதுரு இயேசு கிறிஸ்துவை எத்தனை தரம் மறுதலித்தார்?
8. யாருடைய நாமத்தை தொழுது கொள்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று பேதுரு சொன்னார்?
9. பேதுரு வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கையில் யாவர் மேலும் யார் இறங்கினார்?
10. பேதுரு வாசற்கதவைத் தட்டின போது, யார் கதவைத் திறந்தது?

விடைகள் 25ஆம் பக்கம் பார்க்கவும்

# உடல் நலம் காக்க உதவும் காய்கறிகள்!

## பீட்ரூட் (BEET ROOT)



**பீட்ரூட்** இதனை பீட்டுக் கிழங்கு என்றும், பீட்ரூட் கிழங்கு எனவும் அழைக்கிறார்கள். இது தனது வேரில் உணவைச் சேமித்து வைக்கிறது. இது உருளைக்கிழங்கிற்கு அடுத்தப்படியாக அதிகச் சத்து கொண்டதாகும். இது சிகப்பு நிறம் கொண்டது. சாறு நிறைந்தது. இதற்கெனத் தனியான வாசனை, சுவையுள்ளது. இதற்குத் தனியான நிறம் உள்ளது.

இது பல வடிவங்களைக் கொண்டது. ஆரம்ப காலத்தில் இதன் இலைகளை மட்டுமே உணவாக உட்கொண்டனர். பின்னர்தான் இதன் கிழங்கை உணவாக எடுத்துக்கொண்டனர். இது ஆரம்பத்தில் காரட்டு போன்று நீண்டுதான் இருந்தது. இதன் வடிவத்தைக்கொண்டுத்தான் தற்போது இதனைப் பல ரகங்களாகப் பிரிக்கிறார்கள். இது தட்டை, உருண்டை, பம்பரம், கூம்பு நீண்ட கூம்பு, உருண்டையிலிருந்து முட்டை வடிவம், இப்படிப் பல வடிவங்களைக் கொண்டு உள்ளது. அதேப்போல இதன் நிறமும் சிவப்பு, ரத்தச் சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்திலும் உள்ளது. இது இனிப்பாக இருக்கும். காரணம் இவற்றில் சர்க்கரை உள்ளது.

இந்த வெள்ளை நிற பீட்ரூட், பீட்ரூட் கிழங்கு போலிருக்காது. இது வெண்மையான நீண்ட வேர் ஆகும். இது இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவில் சர்க்கரையாகப் பயிரிடப்படுகிறது. உலகிலுள்ள மக்களின் 45 சதவீத மக்கள் இந்த பீட்ரூட் சர்க்கரையைத் தான் பயன்படுத்துகிறார்கள். கரும்பில் உள்ளதுபோல பீட்ரூட்டிலும் சர்க்கரை உள்ளது என்பதை 1747ம் ஆண்டு சிக்கிஸ் மண்டு மார்க்கிராப் என்கிற விஞ்ஞானிதான் கண்டுபிடித்தார். இந்த பீட்ரூட்டை சிறு சிறு துண்டுகளாகவோ அல்லது சீவியோ வேகவைத்து கிடைக்கும் இனிப்பான திரவத்திலிருந்துதான் சர்க்கரை கிடைக்கிறது. இதிலிருந்து வினிகரும் தயாரிக்கிறார்கள்.

இந்த பீட்ரூட்டின் தாயகம் மெடிட்டேரியன் பகுதியை ஒட்டிய ஐரோப்பா அல்லது அதை ஒட்டிய மேற்குப் பகுதி ஆகும். இது 2000 ஆண்டுகளாகக் காய்கறியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்பத்திலேயே கிரேக்கர்களும், ரோமானியர்களும் பீட்ரூட்டை நன்கு அறிந்திருந்தனர். அவர்கள் முதலில் இதன் இலையைத்தான் உணவாக உண்டனர். பின்னர்தான், இதன் வேர்க்கிழங்கைப் பயன்படுத்தினர். தற்போது இது வெப்ப மண்டலப்பகுதியிலும், ஆப்பிரிக்கா இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலும் பயிரிடப்படுகிறது. இந்தியாவில் ஊட்டச்சத்திற்காக இது விளைவிக்கப்படுகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் இது மிக முக்கிய உணவாக உள்ளது.

இது உடலுக்கு ஊட்டத்தைக் கொடுக்கும் டானிக் போன்றது. இதிலுள்ள கார்போஹைடிரேட் சர்க்கரை வடிவில் உள்ளது. அதில் குறைந்த கொழுப்பும், புரோட்டினும் உள்ளன. பீட்ரூட் சாறு காய்கறிகளில் எடுக்கும் சாறுகளை விடச் சிறந்தது ஆகும். இதில் இயற்கை சர்க்கரை உள்ளது. இந்தச் சாறு எளிதில் ஜீரணமாகும்.

### மருத்துவப் பயன்கள்

பீட்ரூட் கிழங்கில் உள்ள பொருட்கள் சிறுநீரகம் மற்றும் பித்த நீர்ப்பையைச் சுத்தம் செய்கிறது. இந்த பீட்ரூட்டின் சாறானது ரத்தத்துடன் தொடர்பும், ரத்தம் உருவாவதற்கு உறுதுணையாகவும் உள்ளது. பீட்டில் அதிகப்படியான இரும்புச்சத்து உள்ளது. இது இரத்தத்திலுள்ள சிவப்பணு செல்களை சீர்ப்படுத்துவதோடு, மீண்டும் செயல்படத் தூண்டுகிறது. இதனால், புதிய ஆக்ஸிஜன் நமது உடலுக்கு கொடுக்கப்படுகிறது. இது இரத்த சோகை நோய்க்கு மிகவும் சிறந்தது. ஜெர்மன் நாட்டு மருத்துவர் டாக்டர் பிரட்ஜ் கெய்டல், சிவப்பு பீட்ரூட் சாறை நோயாளிகளுக்குக் கொடுத்து ஆய்வு செய்தார். இது உடலுக்குச் சக்தியையும், வலுவையும் கொடுக்கிறது என்று கண்டுபிடித்தார். இதன் இலையை அரைத்து தீப்புண்கள் மீது பூசும்போது, அது தீயினால் ஏற்பட்ட புண் அழுகிப்போகாமல் பாதுகாக்கிறது. மேலும் ஊமைக் காயங்களுக்கும் இதைத்தடவலாம்.

### இதர பயன்கள்

பீட்ரூட்டிலிருந்து சாலட், சட்டினி தயாரிக்கலாம். உடனடி ஊறுகாய் தயாரிக்கலாம். இதனை உருளைக்கிழங்கைப்போல சுட்டும், வேகவைத்தும் சாப்பிடலாம். இதன் இலையை கீரையாக உண்ணலாம். புதிய பீட்ரூட் சீக்கிரமாய் வேகும். நல்ல வாசனையைக் கொண்டு வரும். மற்ற காய்கறிகளுடன், மாமிசத்துடன் சேர்த்து சாப்பிடலாம். சக்கரையும், சக்கரைப்பாகும் தயாரிக்கலாம்.

இந்த பீட்ரூட்டிலிருந்து பீட்ரூட் அல்வா கூட செய்து சாப்பிடலாம். இன்றைக்கே, உங்கள் அம்மாவிடம், சொல்லி பீட்ரூட் அல்வா செய்து சாப்பிடுங்கள். அது மிகவும் ருசியாகவும், மணமாகவும், உடலுக்கு நல்ல ஊட்டச்சத்து மிக்கதாகவும் இருக்கும்.

---



***அதுமாத்திரமல்ல,
உபத்திரவம்
பொறுமையையும்,
பொறுமை பரீட்சையையும்,
பரீட்சை நம்பிக்கையையும்
உண்டாக்குகிறதென்று
நாங்கள் அறிந்து,
உபத்திரவங்களிலேயும்
மேன்மைபாராட்டுகிறோம்.***

*ரோமர் 5:3,4*

# வேதாகமம் வினா - விடைகள்

(மத்தேயு புத்தகத்திலிருந்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவும்)

1. பரலோக இராஜ்ஜியத்தை யார் பிடித்துக்கொள்கிறார்கள்?
2. முதலாவது எதைத் தேட வேண்டும்?
3. பட்சிக்கிற ஓநாய்கள் யார்?
4. யாரை வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்கு ஒப்பிட்டு இயேசு பேசினார்?
5. இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவனுக்கு எது நலமாயிருக்கும்?
6. வரிப்பணம் வாங்குகிறவர்களுக்கு இடறல் உண்டாக்காதபடிக்கு இயேசு என்ன சொன்னார்?
7. இயேசு உயிரோடெழுந்தபின் சீஷர்களிடத்தில் சொன்ன வார்த்தை என்ன?
8. இயேசு கடலில் நடந்த நேரம் என்ன?
9. இயேசுவுக்குச் சீஷனும், ஐசுவரியவானுமாயிருந்த மனுஷனின் பெயர், ஊர் என்ன?
10. நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன். யார், யாரிடம் கூறியது?
11. மனிதனுடைய இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பொல்லாங்கன் பறித்துக்கொள்ள காரணமென்ன?
12. இயேசு சிலுவையில் ஒன்பதாம் மணி நேரத்தில் சொன்ன வார்த்தை என்ன?

**விடைகள்:**

1. பலவந்தம் பண்ணுகிறவர்கள் (11:12), 2. தேவனுடைய ராஜ்யம், நீதி (6:33)
3. கள்ள தீர்க்கதரிசிகள் (7:15), 4. மாயக்காரராகிய வேதபாரகர் (23:27)
5. எந்திரக்கல், சமுத்திரத்தின் ஆழம் (18:6), 6. தூண்டில், மீன், வெள்ளிப்பணம் (17:27)
7. (28:18,19,20), 8. இரவின் நாலாம் ஜாமம் (14:25), 9. யோசேப்பு (27:57)
10. இயேசு 100க்கு அதிபதியிடம் (8:5,7)
11. வசனத்தைக் கேட்டு உணராதிருக்கும் போது (13:19)
12. ஏலீ ஏலீ லாமா சபக்தானி (27:46).

# கர்த்தரின் கட்டளைகள்!

தாழ்மையாயிரு, சகித்துப் போ, விட்டுக் கொடு, அன்பாயிரு, மன்னித்துவிடு, பகைக்கிறவர்களுக்கு நன்மை செய். உண்மையாயிரு போன்ற தேவனுடைய கட்டளைகள் பின்பற்றக் கடினமானவைகள் போலத் தோன்றலாம். ஆனால், அவைகளின் பின்னால் உள்ள நல்ல அம்சங்களையும், தன்மைகளையும். அவைகளால் தவிர்க்கப்படும் தீமைகளையும், அவைகளால் பெற இயன்ற சமாதானம் சந்தோஷம் ஆகியவற்றையும் எண்ணிப் பார்த்தால் அவைகள் அவ்வளவு சிறந்தவை என்பதை நாம் கண்டுணர முடியும்.


# காலத்தால் செய்த உதவி!



சர் வின்ஸ்டன் சர்ச்சில்

தன் வயலுக்குச் செல்லும் வழியில், ஒரு புதருக்குள் ஒரு சிறுவன் விழுந்து, உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பதை ஒரு விவசாயி பார்க்கிறார். அந்தச் சிறுவனை அந்த ஏழை விவசாயி காப்பாற்றி விடுகிறார். சற்று நேரத்தில் அந்தச் சிறுவனுடைய தந்தை அங்கு வருகிறார். அவர் மிகப்பெரிய கோடீஸ்வரர். அவர் அந்த ஏழை விவசாயிடம், ''நீங்கள் என் மகனை காப்பாற்றியதற்கு, உங்களுக்கு நான் ஏதேனும் உதவி செய்ய வேண்டும்'' என்றுச் சொல்லி அவருடைய கையில் ஒரு கட்டுப்பணத்தை எடுத்துத் தருகிறார்.

அதற்கு அந்த விவசாயி, பணத்தை வாங்க மறுத்து, உங்கள் மகனாக இருந்தால் என்ன? என் மகனாக இருந்தால் என்ன? ஒரு உயிரைக் காப்பாற்றுவது என்பது அறம். அதைத்தான் நான் செய்திருக்கிறேன் என்றார். இதற்கு உங்கள் பணம் தேவையில்லை என்றுச் சொல்லி பணத்தை வாங்க மறுத்துவிட்டார். ஆனால், அந்த கோடீஸ்வரருக்கு, இந்த விவசாயிக்கு ஏதேனும் நான் உதவி செய்தேயாகவேண்டும் என்ற ஒரு உந்துதல் ஏற்படுகிறது.



அலெக்சாண்டர் ஃபிளெமிங்

அப்போதுதான், அந்த விவசாயியின் அருகில் இருந்த சிறுவனைப் பார்த்தார். இது உங்கள் மகனா? என்று கேட்டார். விவசாயியும் ஆமென்றார். அப்படியானால், நான் உங்கள் மகனை படிக்க வைக்கிறேன். அதற்காவது எனக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டார். படிப்பு, கல்வி என்று சொன்னவுடன் அந்த விவசாயி அதற்கு ஒப்புக்கொள்கிறார். அந்தக் கோடீஸ்வரன் தன் மகனோடு சேர்த்து அந்த விவசாயியின் மகனையும் படிக்க வைக்கிறார்.

பிற்காலத்தில் அந்த விவசாயியின் மகன், ஒரு மருத்துவராக உயர்ந்து விடுகிறார். அவர்தான், சர் அலெக்சாண்டர் ஃபிளெமிங். இவர் 1928ல் பென்சிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்தவர்.

ஒரு சமயம், அந்த கோடீஸ்வரனின் மகனுக்கு நிமோனியா காய்ச்சல் வந்தது. அந்தக் காய்ச்சலை இந்த அலெக்சாண்டர் ஃபிளெமிங் கண்டுபிடித்த பென்சிலின் ஊசியை போட்டுத்தான் குணமாக்கப்பட்டது.

முன்காலத்தில் அந்த விவசாயத் தந்தையும், பிற்காலத்தில் அந்த விவசாயியின் மகனும் காப்பாற்றிய அந்த கோடீஸ்வரனின் மகன்தான் உலகப்புகழ்பெற்ற பிரிட்டன் நாட்டின் பிரதமர் சர் வின்ஸ்டன் சர்ச்சில் ஆவார்.

இதுதான் காலத்தால் செய்த உதவி என்பதாகும்.

# பெற்றோர்கள் கவனத்திற்கு!

''அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்கு பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள்.'' (உபா. 4:9)

1. அனுதினமும் பிள்ளைகளை தேவ சமூகத்திற்கு கொண்டு வாருங்கள்.
2. பிள்ளைகளுக்காக ஒவ்வொரு நாளும் ஜெபம் பண்ணுங்கள்.
3. பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக உபவாசித்து ஜெபியுங்கள்.
4. பிள்ளைகளுக்கு வேதம் வாசிக்கவும் ஜெபிக்கவும் கற்றுக்கொடுங்கள்.
5. பிள்ளைகளை ஞாயிறு ஆராதனைக்கு அழைத்துச் செல்லுங்கள்.
6. பிள்ளைகளை ஞாயிறு பள்ளிகளுக்கு கண்டிப்பாக அனுப்பிவையுங்கள்.
7. செய்திகளை குறிப்பெடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.
8. காணிக்கையை உற்சாகமாய் கொடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.
9. சரியான நேரத்திற்கு ஆலயத்துக்குச் செல்ல பழக்குவியுங்கள்.
10. ஆலயத்தில் அங்குமிங்கும் ஓடித்திரியாமல் அமைதியாயிருக்கும்படி பழக்கப்படுத்துங்கள்.
11. குடும்ப ஜெபத்தில் பிள்ளைகளுக்கு ஆராதனை மற்றும் ஜெபத்தை நடத்த பழக்குவியுங்கள்.
12. ஜெபம் செய்து விட்டு பள்ளிக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.
13. ஜெபம் செய்த பிறகே உணவருந்தும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.
14. பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க கற்றுத் தாருங்கள்.
15. பொது இடங்களில் நாகரீகமாக நடந்துக்கொள்ள பழக்குவியுங்கள்.
16. ஊழியர்களை நேசிக்கவும், கனப்படுத்தவும் கற்றுத்தாருங்கள்.
17. காலையில் சீக்கிரமே எழும்ப பழக்குவியுங்கள்.
18. பெரியவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் இடையில் குறுக்கிடாமல் இருக்கும்படி பழக்கப்படுத்துங்கள்.
19. பள்ளிக்குச் செல்வதில் சரியான நேரத்தை கடைபிடிக்க வையுங்கள்.
20. பிறபிள்ளைகளோடு நல்ல உறவை வைத்துக்கொள்ள பயிற்றுவியுங்கள்.

இப்படி ஒவ்வொரு காரியத்தையும் சிந்தித்து செயல்படும்போது வெற்றி கிட்டுவது நிச்சயமே.



# நான் யோசேப்பு பேசுகிறேன்!

என் பெயர் யோசேப்பு. என் தகப்பனார் பெயர் யாக்கோபு. சர்வவல்லமையுள்ள தேவன் அவருக்கு இஸ்ரவேல் என்று மறு பெயரிட்டார். அவர் மகாப்பிரபுவும், விசுவாசத்தில் வல்லவனும், கர்த்தரின் சிநேகிதனுமான ஆபிராகாமின் நேச குமாரனாகிய ஈசாக்கின் இரட்டை பிள்ளைகளில் இளைய குமாரனுமாவார். அவருக்கு மொத்தத்தில் பன்னிரண்டு குமாரர்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர்.

நான் என் தகப்பனுக்கு பதினோராவது குமாரன். என் தம்பி பென்யமீன் பிறந்தவுடன் எனது தாயார் ராகேல் மரித்ததால் நான் சிறு வயதிலேயே தாயற்றவனானேன். அப்பொழுது எனக்கு சுமார் ஐந்து வயதிருக்கும். நான் என் தாயின் அன்புக்காக அங்கலாய்த்தேன். அதற்குப் பதிலாக என் தகப்பன் என்னை அதிகமாய் நேசித்து எனக்குப் பலவண்ணமான ஓர் அங்கியையும் தைத்து கொடுத்தார்.

மற்ற என் சகோதரர்கள் எல்லாரும் வாலிபர்கள். அவர்கள் மிகுந்த வாலிப சேட்டைகளை செய்து வந்தார்கள். அவர்களுடைய செய்கைகளையும், நடக்கைகளையும் நான் என் தகப்பனாரிடத்தில் சொல்லி வந்தேன். என் தகப்பனார் அவர்களைக் கடிந்துக்கொள்வார். இதனிமித்தம் என்னுடைய சகோதரர்கள் என்னைப் பகைக்கத் தொடங்கினார்கள்.

ஒரு நாள் இரவு நான் இரண்டு சொப்பனங்களைக் கண்டேன். அதில் ஒன்று சூரியனும் சந்திரனும் பதினோரு நட்சத்திரங்களும் என்னை வணங்கக் கண்டேன். மற்றொன்று, வயலில் நானும் என் சகோதரர்களும் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம். அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருக்கிறது. அவர்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டை சுற்றி வணங்கி நின்றது.

இந்த இரண்டு சொப்பனங்களையும் நான் என் சகோதரர்களுக்கும், தகப்பனுக்கும் அறிவித்தேன். என் தகப்பனும் சகோதரர்களும் என்னை வணங்கி என் தயவை நாடி



நிற்பார்கள் என்பதுதான் நான் கண்ட சொப்பனத்தின் அர்த்தமாகும். இதனிமித்தம் என் சகோதரர்கள் என்னை, சொப்பனக்காரன் என்று பரியாசம் பண்ணி, என்னைப் பகைத்தார்கள். ஆனாலும், நான் அவர்களை நேசித்து வந்தேன். இந்தச் சங்கதிகளையெல்லாம் என் தகப்பனோ தன் இருதயத்தில் வைத்துக்கொண்டார்.

எனக்கு பதினேழு வயதாயிருந்தபோது, என் தகப்பன் என்னைச் சற்று தூரத்தில் ஆடு மேய்க்கப்போயிருந்த என் சகோதரர்களின் நலம் விசாரித்து வரும்படி என்னை அனுப்பி வைத்தார். நான் தூரத்தில் வரும் போதே என்னைக் கண்டு என் சகோதரர்கள் எனக்கு விரோதமாய்ச் சதி செய்து, என்னைப் பிடித்து, எனது பலவர்ண அங்கியைக் கழற்றிவிட்டு, என்னை ஒரு குழியிலே தூக்கிப்போட்டார்கள். அந்தக் குழி தண்ணீரில்லாதிருந்தது. நான் பயந்துப்போய் ஆண்டவரே என்னைக் காப்பாற்றும் என்று சொல்லி அலறி அழுதேன்.

அந்த நேரம் பார்த்து எகிப்து தேசத்திற்கு போகிற இஸ்மவேலர்களான வர்த்தகர்கள் தங்களது வியாபாரப்பொருட்களை ஒட்டகங்கள் மேல் ஏற்றிக்கொண்டு அந்த வழியாக வந்தார்கள். அப்போது, எனது மூத்த அண்ணன் யூதாவின் ஆலோசனையின்படி என் சகோதரர்கள் குழியிலிருந்து என்னைத் தூக்கியெடுத்து அந்த மீதியானிய இஸ்மவேலருக்கு இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அதன் பிறகு எனது சகோதரர்கள் என் பலவர்ண அங்கியை எடுத்து, அதை வெள்ளாட்டுக்கடாவின் இரத்தம் தோய்த்து, ஏதோ ஒரு துஷ்டமிருகம் யோசேப்பை பட்சித்துப்போட்டதென்று அங்கியைக் காட்டி என் தகப்பனிடம் பொய்ச்சொன்னார்கள். இரத்தம் தோய்ந்த அந்த அங்கியைப் பார்த்த என் தகப்பனார் சோகத்தால் துடிதுடித்துப் போனார்.

என்னை இருபது வெள்ளிக்காசுக்கு விலைக்கு வாங்கின இஸ்மவேலர்கள் என்னை எகிப்திலுள்ள பார்வோன் ராஜாவின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபாருக்கு அடிமையாக விற்று விட்டார்கள். ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனும் என்னோடே கூட இருந்தப்படியினால், நான் என் எஜமான் போத்திபார் வீட்டில் செய்து வந்த எல்லா வேலைகளையும் அவர் வாய்க்கப்பண்ணினார். பிறகு எனது எஜமானன் என்னை முழுவதுமாக நம்பி அவர் வீட்டு விசாரனைக்காரனுமாக்கி விட்டார். கர்த்தர் என்னிமித்தம் என் எஜமானின் வீட்டை அதிகமதிகமாய் ஆசீர்வதித்தார்.

நான் நல்ல சவுந்தரியமுள்ள வாலிபனாயிருந்தேன். அதனிமித்தம் என் எஜமானனுடைய மனைவி என்மேல் கண் போட்டு, என்னை அதிகமாய் சோதித்தார்கள். ஆனால் அந்த சோதனையான நேரத்தில், அம்மா என் தேவனுக்கு விரோதமாய் நான் பாவம் செய்யமாட்டேன் என்றுச் சொல்லி ஒரே ஓட்டமாய் அந்த வீட்டை விட்டே ஓடி வந்து விட்டேன். பிசாசானவன் எனக்கு விரித்த வலையில் சிக்கிக் கொள்ளாமல் அற்புதமாய் தப்பிவிட்டேன். ஆனால், அந்த மகராசி தன் கணவனிடத்தில் பொய்ப்புகார் சொல்லி என்னை விலங்குப்போட்டு சிறையில் அடைத்துவிட்டார்கள். ஒரு போதும் என்னைக் கைவிடாத அந்த அன்பின் தேவன், அந்தச் சிறைச்சாலையின் தலைவனுடைய தயவு எனக்குக் கிடைக்கும்படிச் செய்தார். அவர் என் வசம் ஒப்படைத்த சிறைக் கைதிகளை நான் கண்காணித்து வந்தேன்.

ஒரு நாள், அந்த சிறைச்சாலையில் எகிப்தின் இராஜாவிற்கு விரோதமாக குற்றம் செய்த பானபாத்திரக்காரனின் தலைவனும், சுயம்பாகிகளின் தலைவனும் அடைக்கப்பட்டார்கள். அவர்கள் இருவரையும் சிறைச்சாலை அதிகாரி என் வசம் ஒப்படைத்தபடியினால், அவர்கள் இருவரும் என் விசாரிப்பின் கீழ் இருந்தார்கள். ஒரு நாள் இரவு அவர்கள் இருவரும்

சொப்பனம் கண்டு மிகவும் கலங்கி நின்ற வேளையில், நான் அவர்களுடைய சொப்பனங்களுக்கு அர்த்தம் சொன்னேன். நான் சொன்னபடியே அவர்களுக்கு சம்பவித்தது. பானபாத்திரக்காரன் மறுபடியும் உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டான். சுயம்பாகிகளின் தலைவன் தூக்கில் போடப்பட்டான். விடுதலையடைந்த பானபாத்திரக்காரனோ என்னை மறந்து போனான். ஆனால், கர்த்தரோ என்னை மறவாமல் என்னோடிருந்தார்.

ஒரு இரண்டு வருஷம் கழிந்தபின்பு பார்வோன் இராஜா இரண்டு சொப்பனங்களைக் கண்டார். அந்த இரண்டு சொப்பனங்களுக்கும் அவரது அரண்மனையில் இருந்த மந்திரிகளாலும் மந்திரவாதிகளாலும் அர்த்தம் சொல்ல முடியவில்லை. இந்த நேரத்தில்தான், பானபாத்திரக்காரனுக்கு, நான் அவனுடைய சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்னது, அவன் நினைவுக்கு வந்தது. அவன் என்னைக் குறித்து இராஜாவிடம் சொல்லவே, என்னை ராஜ சமூகத்தில் கொண்டு போய் நிறுத்தினார்கள். கர்த்தருடைய நாமத்தில் நான் அந்த இரண்டு சொப்பனங்களுக்கும் அர்த்தம் சொன்னேன். உடனே, ராஜா என்னை முழு எகிப்து தேசத்துக்கும் அதிகாரியாக்கினார்.

அப்போது எனக்கு 30 வயது. ஆஸ்நாத் என்ற பெண்ணை எனக்கு மனைவியாக விவாகம் செய்து வைத்தார். எனக்கு சர்வவல்லமையுள்ள தேவன் மனாசே, எப்ராயீம் என்ற இரண்டு பிள்ளைகளைக் கொடுத்தார். நான் சொப்பனத்துக்கு அர்த்தம் சொன்னபடி ஏழு வருஷப் பஞ்சம் எகிப்தில் மாத்திரமல்ல, சகல தேசங்களிலும் அது தலைவிரித்தாடியது. சகல தேசத்தாரும் தானியம் வாங்கும்படி எகிப்துக்கு வந்தார்கள். கானான் தேசத்திலும் பஞ்சம் உண்டானதினால், என் சகோதரர்களும் கூட தானியம் வாங்க என்னிடத்தில் வந்தார்கள். நான் எனது சிறு வயதில் கண்ட சொப்பனங்களின்படி அவர்களெல்லாரும் என்னை வணங்கினார்கள். பிறகு, நான் அவர்களுக்கு நான் தான் அவர்களுடைய தம்பி யோசேப்பு என்பதை வெளிப்படுத்தினேன். அவர்கள் வெட்கமும் துக்கமும் அடைந்தார்கள்.

நான் பழையவைகளை நினைத்து அவர்களை பழிவாங்காமல், அந்த பஞ்ச காலத்தில் அவர்களை காப்பாற்றி, எகிப்திலுள்ள கோசேன் நாட்டில் குடியிருக்கவும் செய்தேன். இறந்து போனேன் என்றுச் சொல்லி துக்கத்திலிருந்த எனது தகப்பனார் என்னைக் கண்டதும், அவருக்கு போன உயிர் மீண்டுமாய் திரும்பி வந்தது. கர்த்தர் என்னை கைவிடவில்லை. ஏனென்றால், வேதத்தில் உத்தமனுக்கு கர்த்தர் என்றும் துணை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சிறுபிள்ளைகளே! இந்த யோசேப்பின் கதை மூலமாக அவருடைய நேர்மை, விசுவாசம், பொறுமை, ஞானம், தலைமைத்துவம், மன்னிக்கும் குணம் மற்றும் கர்த்தர் மீதுள்ள அசைக்க முடியாத பயபக்தி, பொறுமை, தாழ்மையைக் கற்றுக்கொண்டு, அப்படியே நீங்கள் செயல்படுத்தும்போது, தேவன் அதைப் பார்ப்பார். பார்த்துவிட்டு உங்களையும் யோசேப்பைப் போல உயர்த்துவார்.

17ஆம் பக்கத்தின் விடைகள்

## “யோனாவின் குமாரனாகிய சீமோனே!” - பதில்கள்

1. அந்திரேயா (மத். 4:18), 2. முதலிடம் (மத். 10:2)
3. ஓநாய்களுக்குள்ளே (மத். 10:16), 4. இயேசு (மத். 14:28)
5. இயேசு பேதுருவிடம் (மத். 16:18), 6. மூன்று (மத். 17:4)
7. மூன்று தரம் (மத். 26:70, 72, 74), 8. கர்த்தருடைய நாமத்தை (அப். 2:21)
9. பரிசுத்த ஆவியானர் (அப். 10:44), 10. ரோதை என்ற பெண் (அப். 12:13)

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

Elim
GLORIOUS REVIVAL CHURCH

சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது,
இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. I கொரிந்தியர் 1:18



பிப்ரவரி
# 18
2026
6.30 PM

WEDNESDAY
ASH



# சாம்பல் புதன்

## PASTOR OSBORNE JEBADURAI

இடம்: ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
#.50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் - 24
+919003067777,+919884908777,+919884916777

Date of Publication on Last Week of Previous Month
REGISTRAR OF NEWSPAPER FOR INDIA
TNTAM/2006/17835
Posted on 19th & 20th at RMS/1
Patrica Channel, Egmore, Ch - 8.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக. கலாத்தியர் 6:14



ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

# 40 நாட்கள் சிலுவை தியானக் கூட்டம்

(LENT DAYS)



PASTOR OSBORNE JEBADURAI

**2026 பிப்ரவரி 18 முதல்**
தினமும் மாலை
**6.30 PM**

- அபிஷேகம் நிறைந்த ஆராதனை
- வல்லமையான ஜெபம்
- சத்திய வார்த்தை

**பிப்ரவரி 18-ந்தேதி**
சாம்பல் புதன்கிழமை முதல்
**ஏப்ரல் 2-ந்தேதி வரை**
ஒவ்வொரு நாளும்
மாலை 6.30 மணி முதல்
இரவு 8.30 மணி வரை

இடம்: **ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**
#.50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் - 24
+919003067777,+919884908777,+919884916777

If undelivered please return to:

**Elim Glorious Revival Church**
#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24X7 Prayer: 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com